புதுச்சேரி அரசு
ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

எண்.36-26/ஆநது/மாபி/2022-23 புதுச்சேரி தேதி

அறிக்கை

புதுச்சேரி அரசு, ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, புதுச்சேரி மாநிலத்தின் ஆதி திராவிடர்/பழங்குடியின வகுப்பை சேர்ந்த மகளிருக்கு இலவச தையல் பயிற்சி அளித்துவருகிறது.

புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள அரியாங்குப்பம் மற்றும் கலித்தீர்த்தால்குப்பம் சிறுதொழில் பயிற்சி நிலையங்களில் 2022-23 ஆண்டிற்கான தையல் பயிற்சி ஜூலை 2022 முதல் ஒரு வருடகாலத்திற்கு நடைபெறவுள்ளது. விருப்பமுள்ள மற்றும் தகுதிவாய்ந்த ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மகளிரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்க்கபடுகின்றன. தையல் பயிற்சி காலத்தில் மாதம் ரூ.1500/- உதவித்தொகை வழங்கப்படும். பயிற்சி காலம் 12 மாதங்கள்.

பயிற்சி பெற தகுதிகள், குறிப்புகள்

1. புதுச்சேரி பகுதியை சேர்ந்த ஆதி திராவிடர்/பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் மட்டுமே தகுதியுடையவர்கள்.
2. வயது வரம்பு 14 முதல் 30 வரை (விதவைப் பெண்களுக்கு வயது வரம்பு 40 வரை)
3. பிறப்பு, சாதி, குடியிருப்பு, வருமானம் சான்றிதழ்கள் இணைக்கவேண்டும். புதுச்சேரி பிரதேசத்தில் குறைந்தது 5 வருடங்கள் தொடர்ந்து வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
4. கல்வி தகுதி 8 ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பு.
5. பயிற்சி காலம் முடிந்ததும் பயிற்சிப்பெற்ற தொழிலை தொடர்ந்து செய்ய விருப்பமுள்ளவர் என தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்து உறுதிமொழி பெறப்படும்.
6. பயிற்சி காலத்தின் இடையே எக்காரணத்தைக் கொண்டும் பயிற்சியை நிறுத்தக்கூடாது. அவ்வாறு நிறுத்தம் செய்யும் பட்சத்தில் அது நாள் வரையில் வழங்கப்பட்ட உதவித்தொகை முழுவதும் திரும்ப வசூலிக்கப்படும்.

ஒரு வருடகால பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழும் ஒரு தையல் இயந்திரம் (உபகரணங்களுடன்) இலவசமாக வழங்கப்படும்.

பயிற்சியில் சேருவதற்க்கான விண்ணப்ப படிவங்களை பெற ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி மற்றும் அரியாங்குப்பம், கலித்தீர்த்தால்குப்பம் பகுதிகளில் உள்ள சிறுதொழில் பயிற்சி நிலையங்களை அலுவலக நேரங்களில் அணுகவும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இயக்குநர், ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, புதுச்சேரி என்ற முகவரிக்கு 31.07.2022 அன்று மாலை 5.00 மணிக்குள் சேருமாறு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை https://adwelfare.py.gov.in/ என்ற வலைதள பக்கத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப்பின் வரும் விண்ணப்பங்கள் மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத மேலும் பிறப்பு, சாதி, குடியிருப்பு, வருமானம் சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. சரியான அஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண்ணை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

இயக்குநர்
ஆதி திராவிடர் நலம் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை